<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,
நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.
2026ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் நாள் வியாழன்கிழமை
<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.400/2024</u>
<u>சி.என்.ஆர். எண்.TNTU09-003675-2024</u>

வரிசை எண்.1	விளக்கம்	விவரங்கள்
1.	குற்றமுறையிடுபவர்	A. பூபதி, வயது-62 த/பெ.(லேட்) A.அருணாச்சலம், நெ.37, மேல் தெரு, செட்டியப்பனூர், வாணியம்பாடி.
2.	எதிரி	S.ராஜ்குமார், வயது-42 த/பெ. (லேட்), N.K.சூரப்பன், நெ.2/168, ஏரி கொல்லை வட்டம், கத்தாரி கிராமம், நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் மாவட்டம்.
3.	குற்றம்	138 NI ACT
4.	சம்பவம் நடந்த தேதி	10.12.2023
5.	முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்ட நாள்	29.05.2024
6.	எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள்	-
7.	குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்	-
8.	கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள்	20.08.2024
9.	கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள்.	1.13.05.2026 குவிமுச.பிரிவு 311-ன் கீழ் 788/2026.
10	வழக்கின் சாட்சி முதல்	பு.த.சா.1 -05.09.2024, 07.02.2025,

	விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்	02.05.2025, 26.05.2025, 28.10.2025. எ.த.சா.1 – 13.03.2026 எ.த.சா.2 –18.04.2026, 06.05.2026.
11	எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள்	28.11.2025
12	எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள்	–
13	தீர்ப்பு பகரப்பட்ட நாள்	16.07.2026
14	தீர்வு	கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை

<u>**நீதித்துறை படிவம் எண். 61**</u>

புகார்தாரர் : A. பூபதி, த/பெ.(லேட்) A.அருணாச்சலம்.

எதிரி : S.ராஜ்குமார், த/பெ. (லேட்), N.K.சூரப்பன்.

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டனை

தண்டனை: முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.4,45,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.4,55,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

வரிசை எண்	எதிரியின் பெயர்	தந்தை/ கணவர் பெயர்	சாதி (அ) இனம்	தொழில்	முகவரி	வயது
1.	S.ராஜ்குமார்	(லேட்) N.K.சூரப்பன்	–	–	நெ.2/168, ஏரி கொல்லை வட்டம், கத்தாரி கிராமம், நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் மாவட்டம்.	42

தேதி							தாமதம் (ம) அதன் விளக்கம்
குற்றம்	புகார் அறிக்கை	எதிரி கைது செய்யப்பட்ட நாள்	பிணையில் சென்ற நாள்	வழக்கு விசாரணையின் தொடக்கம்	வழக்கு விசாரணையின் முடிவு	உத்தரவு	...
10.12.23	29.05.24	–	–	20.08.24	28.11.25	16.07.26	–

இவ்வழக்கு கடந்த 29.05.2024 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 08.07.2026 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.E.பாலசுப்பிரமணி, அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.D.ராஜ்குமார், அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

தீர்ப்புரை

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வழக்கின் சுருக்கம்

குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமுறையீட்டாளருக்கு அறிமுகத்தின் அடிப்படையில், குடும்ப தேவைக்காக கடந்த 28.06.2023ம் தேதி ரூ. 4,00,000/-ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதை 24% வட்டியுடன் 3 மாதத்தில் திரும்ப செலுத்துவதாக கூறியதாகவும். 10.12.2023ம் தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா, நாட்றம்பள்ளி கிளை, காசோலை எண் 012668 என்ற காசோலையை ரூ.4,45,000/-த்திற்கு கொடுத்ததாகவும், அதை 06.02.2024ம் தேதி மேற்படி காசோலையை கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளையில் வசூலுக்கு செலுத்தியதாகவும், போதிய பணம் இல்லை(Funds insufficient) என்று காசோலையானது 07.02.2024ம் தேதி மெமோவுடன் திருப்பப்பட்டது என்றும், மேற்படி விவரத்தை 04.03.2024ம் தேதி அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை அனுப்பியதாகவும், அதை 06.03.2024ம் தேதி பெற்றுக்கொண்டு 16.03.2024ம் தேதி பொய்யான சங்கதிகளுடன் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும், இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் காசோலை தொகையை கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளார் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளி இல்லை எனவும், போர்ஜரி கேஸ் என்றும் தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி பு.த.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:–

பு.த.சா.1 குற்றமுறையிடுபவரான பூபதி தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும், 10.12.2023ம் தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா, நாட்றம்பள்ளி கிளையின் 012668 என்ற எண்ணுள்ள ரூ.4,45,000/– க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 07.02.2024ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்றும், 04.03.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பு.த.சா.ஆ.3 என்றும், 06.03.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அவிறிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.4 என்றும், 16.03.2024ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு பு.த.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும், நான் காஸ் வாங்கவில்லை, காசோலை கொடுக்கவில்லை, பொய் வழக்கு என கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் தர்மலிங்கம் எ.த.சா.1 மற்றும் ராஜ்குமார் எ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. குற்றமுறையிடுபவர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. சாட்சிகள்

மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.

6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

6(i). இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

" Affirmanti non neganti incumbit probatio " நிரூபிக்கும் பொறுப்பு குற்றம்சாட்டுபவரிடமே உள்ளது.

<u>7. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:-</u>

7(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.த.சா.ஆ.1 10.12.2023ம் தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா, நாட்றம்பள்ளி கிளையின் 012668 என்ற எண்ணுள்ள ரூ.4,45,000/- க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.2 07.02.2024ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ அசலின் காரணம் **" போதிய பணம் இல்லை "** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.3 04.03.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.4 06.03.2024ம்

தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அவிறிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை பற்றியதாகும், பு.த.சா.ஆ.5 16.03.2024ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு பற்றியதாகும்.

7(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது இந்த நீதிமன்றம் புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளையால் **" போதிய பணம் இல்லை "** என்று திருப்பப்பட்டது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்பதை தீர்மானிக்கிறது. பு.த.சா.ஆ.3 மற்றும் பு.த.சா.ஆ.4னை பரிசீலனை செய்து பார்க்கும் போது குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக அறிவிப்பை பெற்ற ஒரு மாதத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138 பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7(iii). மேலும், அவரது குறுக்கு விசாரணையில் " எதிரியை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 7, 8 வருடமாக தெரியும், எனக்கு உறவினரும் அல்ல, நண்பரும் அல்ல. பின் எதன் அடிப்படையில் எதிரியை தெரியும் என்றால் எனது மைத்துனரும் எல்ஐசி முகவருமான தர்மலிங்கம் என்பவர் மூலம் எதிரியை எனக்கு தெரியும். தர்மலிங்கத்திற்கு எதிரியை எத்தனை வருடமாக தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நடத்தி வரும் சீட்டில் தர்மலிங்கம் மூலம் எதிரி சிறிய சிறிய சீட்டில் உறுப்பினராக சேர்ந்து அதன் மூலம் எதிரி எனக்கு பழக்கமானார். மேற்படி விவரத்தை நான் வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் நான் நடத்தி வரும் சீட்டில் 2லட்சம், 5லட்சத்திற்கான சீட்டில் உறுப்பினராக இருந்தார், கட்டி முடித்து விட்டார்.

அந்த சீட்டு எந்த வருடத்தில் கட்டி முடிக்கப்பட்டது என்றால் 2014லிருந்து 2018க்குள் கட்டி முடிக்கப்பட்டது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc.படித்துள்ளேன். 2லட்சம், 2014லிருந்து 2018 கால கட்டத்தில் நான் மத்திய அரசு ஊழியராக இருந்தேனா என்றால் இருந்தேன். மத்திய அரசு ஊழியராக இருந்ததால் சீட்டு நடத்துவதற்கு முறையாக அனுமதி பெற்றிருந்தேனா என்றால் இல்லை. சீட்டு நடத்துவதற்கு முறையாக அனுமதி வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சீட்டு நடத்துவதற்கு மத்திய அரசிடமோ, மாநில அரசிடமோ உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. சீட்டு நடத்துவதற்கு உரிமம் வாங்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் ரயில்வே துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். பணியிலிருந்தபோதும், ஓய்வு பெற்றபின்பும் நான் நடத்தி வந்த சீட்டில் 200, 300 நபர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். சீட்டு கட்டுபவர்களிடம் எவ்வளவு தள்ளு போனது என்றும், சீட்டு தொகை எவ்வளவு கட்ட வேண்டும் என்றும், என்னிடம் எவ்வளவு இருப்பு தொகை உள்ளது என்றும் ஒரு கார்டில் எழுதி கொடுப்பேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அவ்வாறு எதிரிக்கு நான் எழுதி கொடுத்த கார்டுகளின் நகல் தான் என்றால் சரிதான். **எதிரி என்னிடம் கட்டி வந்த 2லட்சம், 5லட்சம் சீட்டுகளுக்கு நான் எழுதி கொடுத்த கார்டுகளின் நகல் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2லட்சம் மற்றும் 5லட்சத்திற்கான சீட்டுகளை எதிரி எப்போது எடுத்தார், எப்போது கட்டி முடித்தார் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் பார்த்துதான் சொல்ல முடியும். மேற்படி சீட்டுகள் சம்மந்தமாக சீட்டு எடுப்பவர்கள் மற்றும் சீட்டு கட்டியவர்கள் எவ்வளவு தொகை எடுத்தார்கள், கட்டினார்கள் என நான் தனியாக ஒரு பேரேட்டில் பதிவு செய்து அதில் சீட்டு எடுப்பவர்களிடம் கையொப்பமும், பணம் கொடுத்ததற்கு சாட்சி கையொப்பமும் பெறுவேன் என்றால் சரியல்ல, பேரேட்டில் பதிவு செய்வேன், சீட்டு எடுப்பவர்களிடம் மட்டும் தான் பணம் பெற்றதற்காக கையொப்பம் வாங்குவேன். அந்த பேரேட்டை நீதிமன்றத்தில் காண்பித்து சாட்சியம் அளிக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். நான் ஏற்கனவே முன்பு குறுக்கு விசாரணையில் கூறியவாறு சீட்டு நடத்திவருவதற்கான பேரேடை

நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஏற்கனவே எனது நீதிமன்ற சாட்சியத்தில் பேரேடு உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இன்றைய தேதி வரை சீட்டு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். தற்போது சீட்டு எடுத்ததற்காக கையொப்பம் பெறுவேனா என்றால் தற்போது சாட்சி வெறும் பேப்பரில் வாங்கி கொள்வேன். மேற்படி ஆவணத்தை நான் கையில் வைத்துக்கொள்வேனா என்றால் சீட்டு முடியும் வரை வைத்துக்கொள்வேன். இதே நீதிமன்றத்தில் STC 335/2024, STC 446/2024, STC 402/2024, STC 338/2024 இதனுடன் மற்ற 4 வழக்குகளும் இதே காசோலை வழக்குகள் தான் என்றால் சரிதான். மொத்தம் 7 வழக்குகளும் நான் பணம் கடன் கொடுத்ததற்கு கொடுக்கப்பட்ட காசோலைகளா அல்லது சீட்டு நடத்தியதற்காக பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலைகளா என்றால் நான் கடனாக பணம் கொடுத்ததற்கான காசோலைகள். 7 வழக்குகளுக்கான மொத்த தொகை சுமார் ரூ.50,00,000/- இருக்குமா என்றால் இருக்கலாம். நான் கடனாக கொடுத்த ரூ.50,00,000/- ஐ வருமான வரிக் கணக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது சொந்த காசை கடனாக கொடுக்கும் போது அதை வருமான வரிக் கணக்கில் குறிப்பிட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் எவ்வளவு கடன் தொகை என்றால் ரூ.4,00,000/-. STC 401/2024 எவ்வளவு கடன் தொகை என்றால் ரூ.4,50,000/-. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பிலோ, இக்கசோலை மோசடி வழக்கிலோ அல்லது இந்த வழக்கின் முதன்மை வாக்குமூலத்திலோ பணம் எனக்கு எவ்வாறு வந்தது, எப்படி கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கு.மு.சா.ஆ.4லிலோ, குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு பதிலறிவிப்பிலோ என்ன விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு பதிலறிவிப்பை மறுத்து நான் மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பதிலறிவிப்பில் மொத்தமாக எதிரி ராஜ்குமாருக்கு எவ்வளவு கடன் தொகை உள்ளது என்பதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ராஜ்குமார் எனக்கு எவ்வளவு கடன்தொகை கொடுக்க வேண்டும் என்றால் வட்டியில்லாமல் ரூ.8,50,000/-. எதிரிக்கு

இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போதோ அல்லது இந்த வழக்கிலோ STC 401 கடன் தொகை குறித்து குறிப்பிட்டு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை, தனித்தனி வழக்குகள் என்றாலும் கடன் வாங்கிய நபர் ஒன்று தான் என்றால் சரிதான். உண்மையாகவே எதிரிக்கு நான் 2 முறை கடன் கொடுத்திருந்தால் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் வழக்கில் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் தனித்தனி வழக்குகள் என்பதால் ஒரு வழக்கில் இருப்பதை நான் மற்றொரு வழக்கில் குறிப்பிடவில்லை. என்னுடைய கைபேசி எண் 8667844191 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நகலில் உள்ள புகைப்படம் என்னுடையதா என்றால் என்னுடையது தான். என்னுடைய கைப்பேசியிலிருந்து எதிரிக்கு கடனை திருப்பி கொடுக்காவிட்டால் உங்களுடைய நிலம் நீதிமன்றத்திற்கு சென்றுவிடும் என மெஜேஜ் அனுப்பியுள்ளேனா என்றால் அது நினைவில்லை. என்னுடைய மொபைல் எண்ணிலிருந்து எதிரிக்கு அனுப்பிய குறுஞ்செய்தியில் அவர் எனக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.3,78,000/- என குறிப்பிட்டு அனுப்பியுள்ளேனா என்றால் அனைத்து கூற்றுகளும் தவறு. என்னுடைய மொபைல் எண்ணிலிருந்து அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி 2022ம் வருடத்தில் அனுப்பப்பட்டதாக இருக்கலாம் என்றால் இருக்கலாம். என்னுடைய நீதிமன்ற சாட்சியத்திலேயே எதிரி எனக்கு சீட்டு பாக்கி தொகையாக ரூ.3,78,000/-மட்டும் தான் சீட்டு பாக்கி தொகை என்றும் தற்போது இவ்வழக்கில் ரூ.4,00,000/- பாக்கி என்றும் STC 401/2024 வழக்கில் ரூ.4,50,000/- எனவும், மோசடியாக இந்த கசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. அந்த காலத்தில் நான் குறிப்பிட்ட ரூ.3,78,000/-ஐ முழுமையாக பெற்றுக்கொண்டேன், தற்போது தொடுத்துள்ள வழக்கு என்னுடைய பணி ஓய்வின் மூலம் பெற்ற தொகையிலிருந்து அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 சதவீத வட்டியுடன் தருவதாக அவர் ஒப்புக்கொண்டதின்பேரில் எனக்கு வருமானம் தேவைப்பட்டதால் அவருக்கு 2 தவணையாக ரூ.4,00,000/-, ரூ.4,50,000/- கொடுத்து தனித்தனியாக காசோலை பெற்றுக்கொண்டேன், அவர் பணத்தை திரும்ப செலுத்தாததால் இந்த வழக்கை தொடுத்துள்ளேன். ரூ.3,78,000/- எதிரி ஏற்கனவே என்னிடம் வாங்கிவிட்டு திரும்ப கொடுத்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ

அல்லது வழக்கிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்ல தேவையில்லை. மேற்படி விவரத்தை நான் குறுக்குவிசாரணையில் தான் கூறியுள்ளேன் என்றால் கேட்டதால் சொன்னேன். இந்த வழக்கில் நான் எதிரிக்கு எதற்காக பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ மற்றும் காசோலை வழக்கிலோ குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் நான் அனைத்து விவரங்களையும் எனது வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் மேற்கண்ட விவரங்கள் இல்லை என்றால் இருக்கலாம். வழக்கில் நான் எந்த காரணத்திற்காக எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சொல்லாமல் இருக்கலாம். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த முதல் விசாரனை சாட்சியத்திலும் எதிரிக்கு எதற்காக பணம் கொடுத்தேன் என்று சொல்லவில்லை என்றால் இருக்கலாம். காசோலை வழக்கில் எதிரிக்கு எதற்காக பணம் கொடுத்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு கூற வேண்டும் என்பதால் இந்த வழக்கு தவறான வழக்கு என்பதால் தான் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 23.06.2023 நான் எதிரிக்கு எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 28.06.2023. இந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறிவுள்ளேனா என்றால் கொடுக்கப்பட்ட விவரத்தை கூறியுள்ளேன். 28.06.2023 எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். இந்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் இல்லை. நான் எதிரிக்கு யார் மூலம் எதன் அடிப்படையில் பணம் கொடுத்தேன் என்றால் என்னிடம் 5 வருடம் பழகிய நண்பர் என்பதாலும் சீட்டு பணத்தை முறையாக கட்டியதால் அவர் மேல் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலும் பேருந்து உரிமையாளர் என்பதாலும் கொடுத்தேன். மேற்படி விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால் இல்லை. STC NO 401/2024 என்ற வழக்கில் எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 07.09.2023 . நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 11.09.2023 ல் என் வீட்டில் கொடுத்தேன். இந்த வழக்கில் மேற்கண்ட விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ வழக்கிலோ சாட்சியத்திலோ கூறவில்லை என்றால்

ஞாபகமில்லை. STC.NO.400/2024 ல் சம்மந்தப்பட்ட வழக்கின் விவரங்களை STC.NO.401/2024 என்ற வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் வெவ்வேறு வழக்குகள் என்பதால் குறிப்பிடவில்லை. இரண்டு காசோலை வழக்கிற்க்கும் ஒரே வழக்கறிஞரை நியமித்து ஒரே தேதியில் தான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேனா என்றால் ஒரே வழக்கறிஞர் என்பதால் இரண்டு வழக்குகளின் விவரங்களை கூறி நோட்டீஸ் அனுப்ப சொன்னேன். அறியப்பட்ட பதில் அறிவிப்பு தகவலுக்கு நான் மறுத்து பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் தெரியபடுத்தி விட்டேன். என்னுடைய வழக்கறிஞரிடம் தகவலை தெரிய படுத்திய பிறகு எதுவும் பதில் மறுப்பு அறிவிப்பு அனுவிப்பினாரா என்ற விவரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொள்ளவில்லை. நான் சீட்டு நடத்தியதற்காக வாங்கப்பட்ட காசோலையை தவறாக பயன்படுத்தி எதிரிக்கு வழக்கிறஞர் அறிவிப்பு அனுப்பபட்டுள்ளதாக பதில் அறிவிப்பில் கூறியுள்ள விவரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் தவறான தகவல்கள் அடங்கிய மனுவை தெரிந்துக்கொண்டேன்.STC 400/2024 ,STC 401/2024 இரு வழக்கிலும் உங்களிடம் பணம் பெற்றுக்கொண்டு காசோலையில் கையொப்பம் எதுவும் எதிரி செய்துக்கொடுக்கவில்லை என்றால் முற்றிலும் தவறானது. எதிரி ராஜ்குமார் எந்த தேதியில் ரூ.4 லட்சத்தை என்னிடம் கேட்டார் என்றால் 23.06.2023. நான் எப்போது பணம் கொடுத்தேன் என்றால் 26.06.2023. எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்துக் கொடுத்தேன். பணம் கொடுக்கும் போது யார் இருந்தார்கள் என்றால் யாரும் இல்லை. பணம் என்ன ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன் என்றால் 500 ரூ நோட்டுகளாக கொடுத்தேன். பணம் கொடுத்தபின் பணத்தை எப்போது திருப்பி கொடுக்குமாறு எதிரியிடம் கேட்டேன் என்றால் இரண்டு மாதம் கழித்து கேட்டேன். இரண்டு மாதம் கழித்து எந்த தேதியில் கேட்டேன் என்றால் தேதி நினைவில்லை. இரண்டு மாதம் கழித்து பணம் கேட்ட விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இரண்டு மாதம் கழித்து பணம் கொடுக்காததால் நான் என்ன செய்தேன் என்றால் அடிக்கடி அவரிடம் கேட்டுவந்தேன், காலம் தாழ்த்தி வந்தார் பிறகு சிறிது காலம் கழித்து டிசம்பர் மாதத்தில் ஒரு காசோலை கொடுத்தார். தேதி 10.12.2023.

எங்கு வைத்து கொடுத்தார் என்றால் பொது இடத்தில் வைத்து தான் கொடுத்தார். அந்த பொது இடம் எங்கு உள்ளது என்றால் செட்டியப்பனூர் என்ரன்ஸ்சில் உள்ள என்னுடைய கார் செட்டில் கொடுத்தார். பொது இடத்தில் வைத்து காசோலை கொடுத்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஒரு மாதம் கழித்து வங்கியில் செலுத்துமாறு கூறினார். வங்கியில் செலுத்துவதற்குள் பணத்தை தயார் செய்வதாகவும் கூறினார். நான் ஒரு மாதம் கழித்து தான் வங்கியில் செலுத்தினேன் என்றால் சரிதான். வேறு மாதிரி புகாரிலோ, வாக்குமூலத்திலோ சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். அதன் பிறகு நான் என்ன செய்தேன் என்றால் காசோலையை வங்கியில் செலுத்தினேன். போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. எந்த வங்கி என்றால் கரூர் வைசியா வங்கி, எந்த வங்கி எண் கொண்ட கணக்கில் நான் வசூலுக்காக செலுத்தினேன் என்றால் 12111550004183б, இந்த வங்கியில் எனக்கு ஒரு வங்கி கணக்கு தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வங்கி மூலமாக தான் எனக்கு வரவேண்டிய அனைத்து காசோலைகளின் தொகையையும் எடுப்பேன் என்றால் சரிதான். சுமார் 10 காசோலைகள் தொகையை இந்த வங்கியின் மூலம் எடுத்திருப்பேன் 6 முதல் 7 எடுத்திருப்பேன். இந்த வங்கியின் மூலம் செலுத்திய 6 முதல் 7 காசோலைகள் அனைத்தும் 3 முதல் 4 காசோலைகள் திருப்பப்பட்டதா என்றால் இல்லை. திருப்பபட்டிருக்கும். திருப்பபட்டதாக கூறிய 3 முதல் 4 காசோலைகள் சம்மந்தப்பட்ட வழக்கும் இதே நீதிமன்றத்தில் வருகின்றன என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் எதிரியின் மீது இரண்டு வழக்குகளும் மற்ற 7 அல்லது 8 காசோலை சம்மந்தமான வழக்குகளை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். 9 வழக்குகளுக்கும் உண்டான தொகை குறித்த வருமான வரியில் காண்பித்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தனிப்பட்ட முறையில் எனக்கு வருமானவரி கணக்கு உள்ளதா என்றால் உள்ளது, நான் ஓய்வு பெற்ற மத்திய அரசு ஊழியர் என்பதால் கடன் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான வருமான வரி சம்மந்தப்பட்ட கணக்குகளை காண்பித்திருப்பேன் என்றாலும் பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் காண்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல. 9 வழக்குகளுக்கும் உண்டான தொகை

மொத்தமாக 1 கோடி 25 லட்சம் இருக்குமா என்றால் இல்லை. 50 லட்சத்திற்குள் தான் இருக்கும். ஒரு தனிப்பட்ட நபர் 2 லட்சத்திற்கு மேல் கடன் கொடுத்தால் வருமான வரித்துறைக்கு காண்பிக்கவேண்டும் என்றாலும் நான் கடன் கொடுக்கவில்லை என்பதால் தான் காண்பிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நட்பு ரீதியாக கொடுக்கபட்ட பணம். மற்ற 7 வழக்குகளுக்கு உண்டான காசோலை தொகை நட்பு ரீதியாக கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. STC.No. 400 / 2024 வழக்கிற்கு உண்டான வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் நினைவில்லை. எதிரி பதில் அறிவிப்பு அளித்த தேதி என்னவென்றால் நினைவில்லை. பதில் அறிவிப்பில் என்ன என்ன சங்கதிகள் குறிப்பிட்டு இருந்தது என்றால் அனைத்து பொறுப்புகளையும் வழக்கறிஞர் வசம் ஒப்படைத்துவிட்டேன். பதில் அறிவிப்பை என்னுடைய தரப்பில் புதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்பபட்டிருப்பது எனக்கு தெரியுமா என்றால் அனைத்தும் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். அந்த பதில் அறிவிப்பில் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் காசோலையை கொடுக்கவில்லை என்றும் காசோலையை நிரப்பட்டு கையொப்பம் ஏதும் செய்துக் கொடுக்கவில்லை என்றும் அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தவறான சங்கதிகளுடன் பதில் அறிவிப்பு வந்ததாக வழக்கறிஞர் தெரிவித்தார். பதில் அறிவிப்பானது இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வந்தது என்றால் சரிதான். பதில் அறிவிப்பில் வந்த சங்கதிகளை மறுத்து புகாரிலோ வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் அனைத்து என் வழக்கறிஞர் பொறுப்பில் விட்டுவிட்டேன். வழக்கறிஞர் பொறுப்பில் விட்டுவிட்டேன் என்று கூறியுள்ள நிலையில் வழக்கு விவரம் ஏதும் எனக்கு தெரியாது என்றால் தெரியும். STC.No. 401 / 2024 வழக்கில் கொடுத்த காசோலை தொகையை எந்த தேதியில் கேட்டேன் என்றால் இரண்டு மாதம் கழித்து கேட்டேன் குறிப்பிட்டு தேதி மாதம் சொல்லமுடியுமா என்றால் முடியாது. இந்த வழக்கிற்கான காசோலையை எங்கு கொடுத்தார் என்றால் வாணியம்பாடி பேருந்து நிலையத்தில் கொடுத்தார். எந்த தேதியில் என்றால் டிசம்பர் மாதம் 2023. தேதி நினைவில்லை. எந்த தேதியில் காசோலையை வங்கியில் செலுத்தினேன் என்றால் 06.02.2024. இந்த வழக்கு காசோலையை தவிர வேறு எதும் காசோலைகளை அந்த தேதியில் கலெக்சனுக்காக வங்கியில்

செலுத்தினேனா என்றால் இல்லை (மீண்டும் சாட்சி நினைவில்லை என்று கூறினார்). STC.No. 400 / 2024 சம்மந்தப்பட்ட பணத்தொகையை பெறமாலேயே மீண்டும் எதிரிக்கு STC.No. 401 / 2024 க்கான தொகையை எதிரிக்கு கொடுத்தேனா என்றால் காசோலையை வாங்குவதற்கு முன்பே இரண்டு வழக்கு சம்மந்தப்பட்ட பணத்தையும் கொடுத்தேன். நான் முதலில் கொடுத்த கடன் தொகை ரூ.4 லட்சத்தை திரும்பபெறாமலே மீண்டும் எதிரிக்கு ரூ.4 லட்சத்து 50,000 த்தை இரண்டாவது முறையாக பணம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அவர் நல்ல மனிதர் என்பதால் கொடுத்தேன். நான் உண்மையாக பணம் கொடுத்திருந்தால் முதலில் கொடுத்த கடன் தொகையே திரும்ப வரவில்லை என கருதி இரண்டாவது முறையாக கடன் கொடுத்திருக்க மாட்டேன் என்றாலும் வழக்கிற்காக எதிரியின் மீது பொய்யான இரண்டு காசோலை வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் முற்றிலும் தவறு. நான் சீட்டு நடத்தி வருகிறேன் என்றாலும் சீட்டிற்காக கொடுத்த காசோலையை தவறுதலாக எழுதப்படாத கையொப்பம் செய்யப்படாத காசோலையை பயன்படுத்தி இரண்டு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் பணம் கொடுத்திருந்தால் வருமான வரி கணக்கில் கடன் தொகையை காண்பித்திருப்பேன் என்றாலும் நான் பணம் கொடுக்காததால் தான் வருமான வரிகணக்கில் மேற்படி கடன் தொகையை காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் கொடுக்காத பணத்தை நான் கொடுத்ததாக எதிரியின் மீது தவறான காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், முற்றிலும் தவறு. பணம் கொடுத்தேன். நான் கொடுத்த கடன் தொகை அதிக தொகை என்பதால் சாட்சிகள் முன்னிலையில் வைத்து கொடுத்திருப்பேன் என்றாலும் எதிரியிடம் இருந்து பணத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நன்பர் என்பதால் சாட்சிகள் முன்னிலையில் கொடுக்கவில்லை. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் எதிரி இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டியவர் என்றாலும் சரியல்ல " என சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

8. **குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமானங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.**

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ. பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு (preponderance of Probabilities) ஆகும்.

9. இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளாரா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சி எ.த.சா.1 மற்றும் எ.த.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

9(i). இவ்வழக்கில் தர்மலிங்கம் எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற சாட்சியத்தில் " எனக்கு நீதிமன்றத்தில் இருந்து ராஜ்குமார் பூபதி என்பவரிடம் சீட்டு கட்டி விவரம்கு றித்து கேட்டு அழைப்பாணை வந்தது. புகார்தாரர் எனக்கு மாமா உறவு முறை ஆவார். எதிரி ராஜ்குமார் எனக்கு நண்பர் ஆவார். கடந்த 2015 ம் வருடம் ராஜ்குமார் கேட்டுக்கொண்டதினால் பூபதி என்பவரிடம் சீட்டுகட்டுவதற்காக சேர்த்திவிட்டேன். அந்த சீட்டு தொகையையும் கட்டிவிட்டார், அதற்கான தொகையையும் முழுவதுமாக வாங்கிக்கொண்டார். புகார்தாரருக்கும் எதிரிக்கும் இதற்குமுன் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். நான் தான் அவரை சேர்த்திவிட்டேன். 2015 ம் வருடம் புகார்தாரர் மத்திய அரசு இரயில்வே ஊழியராக இருந்தார். புகார்தாரர் நடத்துவதற்கு உரிமம் பெற்றாரா என்றால் அதுக்குறித்து எதுவும் தெரியாது. அவர் சீட்டு கட்டும் போது கொரானா காலக்கட்டம் எதுவும் இல்லை. சீட்டுக்கட்டும் போது கையொப்பம் இடாமல் பிணையமாக எதிரி புகார்தாரரிடம் கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரும் நான் அவருக்கு உறவினர் என்ற முறையில் என்னிடம் கொடுத்து என் மூலமும் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. புகார்தாரர் சீட்டுக்கட்டுவதற்காக காசோலைகளை வாங்குவார் என்று சொன்னால் சரியல்ல. அது சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் பல வழக்குகள் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் புகார்தாருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் அவர் கொடுத்துள்ள வழக்கு குறித்து தெரியும் என்றாலும் சரியல்ல, நான் அறிமுகபடுத்தும்போதே என் மாமா என்றுதான் அறிமுகம் செய்துள்ளேன், அதனால் எதிரி என்னை இந்த வழக்கில் அவர் தரப்பு சாட்சியாக சேர்த்திருக்ககூடாது. புகார்தாரரிடம் சீட்டுக்காக கொடுத்த காசோலையை வைத்து தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரி புகார்தாரரிடம் கடன் வாங்கவில்லை என்றாலும் அதுப்பற்றி எனக்கு தெரியாது " என சாட்சியமளித்துள்ளார்.

9(ii). இவ்வழக்கில் ராஜ்குமார் எ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற சாட்சியத்தில் "புகார்தாரரை தெரியும். நான் புகார்தராரரிடம் கடந்த 2016 லிருந்து 2023 வரை சீட்டுக்கட்டி வந்தேன். புகார்தாரர் தர்மலிங்கம் என்பவர் மூலம் தான் எனக்கு

அறிமுகம் ஆனார். நான் 2016 ல் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் சீட்டை போட்டேன். அந்த சீட்டிற்கு மாதம் மாதம் ரூ.12,500 மற்றும் ரூ.5,000 ஒரு சீட்டிற்கும் மாதம் மாதம் செலுத்திவந்தேன். நான் 2019 ல் சீட்டு எடுத்தேன். அதற்கு புகார்தாரர் மூன்று வெற்று காசோலைகளும் என்னுடைய நிலத்தின் அசல் பத்திரித்தையும் பிணையமாக பெற்றுக்கொண்டார். அதன்பிறகு 2020 ம் காலக்கட்டத்தில் கொரானா ஏற்பட்டதால் மீதுமுள்ள சீட்டுகளை என்னால் கட்டமுடியாது. அதற்கு தர்மலிங்கம் மற்றும் புகார்தாரரும் என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவைத்து 19.04.2021 ம் தேதி அடைமானம் போட்டார்கள். என்னை கையெழுத்து மட்டும் செய்யசொன்னார்கள். எதற்காக என்று தெரியவில்லை. மீதமுள்ள ஐந்து சீட்டுகளில் இரண்டு சீட்டுகளை கட்டிவிட்டேன். மூன்று சீட்டுகள் மீதம் இருந்தது. அதற்கு அவர் பலமடங்கு வட்டிப்போட்டு என்னிடம் பணம் கேட்டார். அவ்வளவு தொகையை என்னால் கொடுக்கமுடியாது என கூறினேன். நான் கொடுத்த மூன்று காசோலைகளையும் மற்றும் என் சொத்தின் மீது போட்ட அக்ரிமண்ட்யையும் வைத்து வழக்கு தாக்கல் செய்தார். முதலில் STC 546/2023 09.03.2022 ல் ரூ.5,00,000 வாங்கியதாக கூறி தர்மலிங்கத்தை வைத்து காசோலை வழக்கு தாக்கல் செய்தார். பிறகு OS 121/2024 என்ற எண்ணில் என் மீது அக்ரிமண்ட் வழக்கு போட்டார்.அதில் நான் 19.04.2021 ல் ரூ.2,50,000 வாங்கியதாகவும் பொய்யாக அந்த வருடத்தில் மட்டும் ரூ.7,50,000 கொடுத்ததாக பொய்யாக வழக்கு போட்டுள்ளார். பிறகு STC 400/2024 பூபதி 28.06.2023 ல் ரூ.4 லட்சம் கொடுத்ததாகவும் மற்றும் மூன்று மாதத்திற்குள் திருப்பி தரவேண்டும் என்ற நிபந்தனையில் கொடுத்ததாகவும் கூறி பின்பு STC 401/2024 11.09.2023 ல் ரூ.4,50,000 கொடுத்தாகவும் அதை போல் மூன்று மாத்திற்குள் திருப்பி தரவேண்டும் என்ற நிபந்தனையில் கொடுத்ததாகவும் கூறி என் மீது பொய்யான வழக்கை தாக்கல் செய்தார். இதை தவிர 03.12.2023 ரூ.6,00,000 கொடுத்ததாகவும் மற்றொன்று 31.12.2023 ரூ.5,00,000 கொடுத்ததாகவும் புரோநோட்டை வைத்து என்மீது தவறான லீகல் நோட்டிஸ் 04.03.2024 அன்று அனுப்பியுள்ளார். இந்த வருடத்தில் மட்டும் எனக்கு பூபதி ரூ.19,50,000 கொடுத்ததாக பொய்யாக வழக்கு மற்றும் லீகல் நோட்டிஸ் அனுப்பியுள்ளார். பூபதி செல்வந்தர் அல்ல, பென்சன் மூலம் ஜீவன் நடத்துவார். அவர் இரயில்வேயில்

ஆபிசராக வேலை செய்துவந்தார். வருமானத்திற்கு வருமான வரிக்கட்டுவார். அவருக்கு மூன்று வங்கி கணக்குகள் உள்ளதால் பணத்தை அந்த வங்கிக்கணக்குகளுக்குதான் அனுப்ப சொல்லுவார். வருமான வரிக்கட்டி வருவதாகவும் கூறினார். ஆனால் எனக்கு பணம் கொடுத்திருந்தால் வருமான வரிக்கட்டி இருப்பார். வங்கிகணக்குகளை பார்த்தால் நான் அவருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்ற விவரம் தெரியும். என்னை தவிர இதே நீதிமன்றத்தில் பத்து நபர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். பாலு என்பவர் மீது இரண்டு வழக்குகளும், கோவிந்தராஜ், சுதாகர், அனிதா, என் மீது முன்று வழக்குகளும் தாக்கல் செய்துள்ளார். இந்த அனைத்து வழக்குகளும் சீட்டுக்காக கொடுத்த காசோலையை வைத்து தான்தாக்கல் செய்துள்ளார். இதற்கான ஆதாரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். 04.03.2024 ல் ரூ.6 லட்சத்திற்கான புரோநோட் சட்ட அறிவிப்பு எனக்கு அனுப்பினார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த புரோநோட் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு எ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதற்கு நான் 16.03.2024 ல் பதில் அறிவிப்பு அனுப்பினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த பதில் அறிவிப்பு எ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டை தான் அது. **அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை எ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 04.03.2024 ல் ரூ.5 லட்சத்திற்கான புரோநோட் சட்ட அறிவிப்பு எனக்கு அனுப்பினார். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த ரூ.5 லட்சத்திற்கான புரோநோட் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு எ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதற்கு நான் 16.03.2024 ல் பதில் அறிவிப்பு அனுப்பினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. **அந்த ரூ.5 லட்சத்திற்கான பதில் அறிவிப்பு எ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அஞ்சல் ஒப்புகை அட்டை தான் அது. **அந்த அஞ்சல் ஒப்புகை அட்டை எ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** STC 335/2024 ல் என்ற

வழக்கை பாலு என்பவர் மீது தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமான ஆவணம் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த STC 335/2024 ல் என்ற வழக்கின் ஆவணம் **எ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** STC 337/2024 ல் என்ற வழக்கை கோவிந்தராஜ் என்பவர் மீது பூபதி தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமான ஆவணம் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த STC 337/2024 ல் என்ற வழக்கின் ஆவணம் **எ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** STC 402/2024 ல் என்ற வழக்கை பாலு என்பவர் மீது பூபதி தாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமான ஆவணம் என்னிடம் உள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது. அந்த STC 402/2024 ல் என்ற வழக்கின் ஆவணம் **எ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இதுப்போன்று சீட்டுக்காக கொடுத்ததை வைத்து அனைவரின் மீதும் வழக்கு தாக்கல் செய்துவருகிறார். நான் 28.06.2023 ல் மூன்று மாதத்தில் கொடுக்ககூடிய பணத்தையே திருப்பி தராதபோது என்னை நம்பி ரூ.27,00,000 ஐ எப்படி தந்திருப்பார்? அதனால் அவர் என்மீது தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டியது ஆகும் " என சாட்சியமளித்துள்ளார்.

9(iii). புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது " இந்த இரண்டு வழக்குகளிலும் மூலமாக இருக்ககூடிய இரண்டு காசோலைகளையும் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த காசோலைகள் எந்த வங்கியினுடையது என்றால் ஒன்று யுனியன் வங்கி, நாட்றம்பள்ளி கிளை மற்றொன்று HDFC வங்கி, திருப்பத்தூர் கிளை. இரண்டு காசோலை வழக்குகளிலும் காசோலைகளை நான் கொடுக்கவில்லை என்றும் கையொப்பம் என்னுடையது இல்லை என்றும் வழக்காடி உள்ளேன் என்றால் கையொப்பம் போட்டதாக நினைவில்லை, சீட்டுக்காக காசோலைகளை கொடுத்தேன், அதைக்குறித்து பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். பதில் அறிவிப்பில் அதுபோன்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல, கூறியுள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமான காசோலை நான் கொடுத்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான், சீட்டுக்காக கொடுத்ததாக கூறியுள்ளேன். காசோலையை கொடுத்ததாக

ஒப்புக்கொண்டாலே அது கையொப்பம் இட்டு கொடுத்ததாக எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரியல்ல, நான் பிணையமாக கொடுத்தேன். கையொப்பம் போடாமால் கொடுத்தால் காசோலையை யாரும் வாங்கமாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் கையொப்பம் போடாமல் தான் கையொப்பம் மற்றும் பத்திரத்தை கொடுத்தேன். அந்த பத்திரத்தை வைத்து தான் தர்மலிங்கம் என்பவர் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டார் என்று சொல்கிறேன் என்றால் சரிதான், அடைமானம் போடுவதாக கூறினார்கள், என்ன செய்தார்கள் என்று தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E Mechanical தேர்ச்சி அடைந்துள்ளேன். நான் தற்போது வரை நல்ல சுயநினைவுடனும் உடல் நலத்துடனும் தான் உள்ளேன் என்றால் சரிதான். கையொப்பம் போடாத காசோலை மற்றும் முத்திரை தாளை எந்த ஆண்டில் கொடுத்தேன் என்றால் 2019 ல் கொடுத்தேன். நான் B.E Mechanical தேர்ச்சி அடைந்துள்ளதால் அடைமானமா கிரையஒப்பந்தமா என தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை என்று சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் தற்போது காட்டப்படும் பத்திரம் தான் தர்மலிங்கத்திற்கு எழுதிக்கொடுத்த விற்பனை ஒப்பந்தம் என்று சொன்னால் சரிதான், அவசரமாக பஸ் டியூட்டிக்கு செல்லவேண்டும் என்ற காரணத்தினால் அதை நான் படிக்காமல் கையொப்பம் போட்டுக்கொடுத்துவிட்டேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் தற்போது பேருந்தின் உரிமையாளராக உள்ளேன், அப்போது நான் டிரைவராக பணிபுரிந்தேன். எந்த ஆண்டில் நான் டிரைவராக பணிபுரிந்தேன் என்றால் 2015 முதல் 2023 வரை நான் டிரைவராக எனது தந்தையாரிடம் பணிபுரிந்துவந்தேன். நான் அடைமானம் கொடுத்ததாக சொன்ன கிரைய ஒப்பந்தம் 2019 என கூறியுள்ள நிலையில் தற்போது விற்பனை ஒப்பந்தம் பத்திரத்தில் ஏப்ரல் 2021 என்று தான் முத்திரை தாளில் தேதி உள்ளது என்பதால் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வழக்கின் புகார்தாரரை எனக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2016 க்கு பின் தெரியும். நான் புகார்தாரரிடம் எந்த ஆண்டு சீட்டுக்கட்டி வந்தேன் என்றால் தேதி நினைவில்லை, ஆனால் 2016 க்கு பிறகு. எப்போது சீட்டு முடிந்தது என்றால் 2020–2021 ல் முடிந்தது. நான் எந்தெந்த தொகைக்கு சீட்டில் உறுப்பினராக சேர்ந்தேன் என்றால் ரூ.5 லட்சம் மற்றும் ரூ.2

லட்சம். ஐந்து லட்சத்திற்கு மாததவனை எவ்வளவு என்றால் ரூ.12,500. இரண்டு லட்சத்திற்கு மாததவனை எவ்வளவு என்றால் ரூ.5,000. இரண்டு சீட்டுகளும் எத்தனை மாத கால அளவுள்ள சீட்டுகள் என்றால் 40 மாத கால அளவுள்ள சீட்டுகள். 40 மாத கால அளவுள்ள சீட்டுகளும் மடிப்பு சீட்டா அல்லது பிரதிமாத தொகை செலுத்தும் சீட்டா என்றால் கமிசன் சீட்டு. 40 மாதமும் சீட்டு கட்டினேனா அல்லது அதைவிட குறைந்த மாதம்சீட்டுக்கட்டினேனா என்றால் 40 மாதமும் கட்டினேன். எத்தனையாவது தவணை சீட்டு கட்டிவிட்டு நான் சீட்டு எடுத்தேன் என்றால் அது எனக்கு நினைவில்லை. எத்தனை சீட்டு நான் கட்டவேண்டி இருந்ததால் நான் காசோலை கொடுத்தேன் என்றால் 8 , 9 சீட்டுக்கள் இருந்திருக்கும். விற்பனை ஒப்பந்தத்தில் சாட்சியாக கையொப்பம் இட்டுள்ளது எனது மனைவி R.கௌசல்யா தான் என்றால் சரிதான். எட்டு சீட்டு என்றால் ரூ.12,500 தவணை உள்ள சீட்டில் எட்டு மாத பாக்கி என்பது ரூ.1 லட்சம் என்றாலும் ரூ.5000 தவணை உள்ள சீட்டில் எட்டு மாத பாக்கி என்பது ரூ.40000 என்றாலும் சரிதான்.இரண்டு சீட்டுகளுக்கும் சேர்த்த இரண்டு காசோலைகள் கொடுத்தேன் என்றால் முதலில் சாட்சி சரி என சொல்லிவிட்டு பிறகு மூன்று என சாட்சி கூறினார். இரண்டு சீட்டுக்கு மூன்று காசோலைகள் கொடுக்கவேண்டும் என என்ன அவசியம் என்றால் பிணையாக கேட்டதால் கொடுத்தேன். மூன்று காசோலைகளையும் கையொப்பம் போடாமல் தான் கொடுத்தேன் என்றால்சரிதான். அது என்ன வங்கியுடையது என்றால் பாரத ஸ்டேட் வங்கி, நாட்றம்பள்ளி கிளை. கையொப்பம் இல்லாத காசோலையை மோசடியாக வேறு நபரால் கையொப்பம் இட்டு வங்கியில் செலுத்தியிருந்தால் கையொப்பம் ஒத்து போகவில்லை என்று தான் திருப்பபட்டிருக்கும் என்றால் சரிதான். மூன்று காசோலைகள் தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு வாங்கினேன் என்றால் சரிதான். அறிவிப்புகளை வாங்கிய பிறகு பதில் அறிவிப்பில் மோசடியாக எனது கையொப்பத்தை இட்டு தாக்கல் செய்துள்ளதாக காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் வங்கியில் ஸ்டாப் பேமென்ட் கொடுத்துள்ளேன். நான் வங்கியில் ஸ்டாப் பேமென்ட் கொடுத்தது தர்மலிங்கம் என்பவர் தொடர்புடைய STC 546/2023 என்ற வழக்கிற்கு உரியது என்றால் சரிதான். இந்த புகார்தாரர் தொடர்புடைய STC 400/2024, STC 401/2024 என்ற வழக்கு சம்மந்தமாக

வங்கியில் ஸ்டாப் பேமென்ட் கொடுக்கவில்லை என்றால் சரிதான். STC 546/2023 என்ற வழக்கில் குற்றவாளி என இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் மீது நான் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் செய்துள்ள மேல்முறையீட்டில் இந்த மாதம் 16.05.2026 தேதிக்குள் ரூ.1,02,000 செலுத்தவேண்டும் என 17.04.2026 ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் இதே நீதிமன்றத்தில் 18.04.2026 ல் மேற்படி STC 546/2023 என்ற வழக்கு பொய் வழக்கு என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் புகார்தாரர் சீட்டு பரிவர்த்தனைக்காக எந்த காசோலைகளையோ முத்திரைதாள்களையோ கடனுறுதி சீட்டுகளையோ பெறுவதில்லை என்று சொன்னால் சரியல்ல. STC 546/2023 என்ற வழக்கில் இந்த வழக்கின் புகார்தாரர் அதுபோன்று வாங்குவதில்லை என எனது தரப்பில் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவர் பொய்சாட்சியம் அளித்துள்ளார். அவர் பொய் சாட்சியம் அளித்துள்ளார் என்பதற்காக எதேனும் மேல்நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் புகார்தாரர் சீட்டுக்காக பிணையமாக காசோலைகளை வாங்கியிருந்தால் மீதமுள்ள மாதத்திற்கு தான் வாங்கியிருப்பார் என்றால் இரண்டு சீட்டுக்கு இரண்டு காசோலைகளை தான் வாங்கியிருப்பார் என்றாலும் மூன்று காசோலைகளை கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்று சொன்னாலும் சரியல்ல, பிணையத்திற்காக தான் வாங்கினார். நான் உயர்ந்த படிப்பு படித்துள்ளேன் என்றாலும், மூன்று வங்கியில் வங்கிகணக்கு வைத்துள்ள செல்வந்தர் என்றாலும், நான் இன்று தேதி வரை நல்ல சுயநினைவில் தான் இருக்கிறேன் என்பதாலும் மீதியுள்ள நிலுவை மாதங்களுக்கு நிலுவை தொகையை குறிப்பிடாமல் நிரப்பப்படாத காசோலையை கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் 2016 இல் இருந்து 2023 வரை சீட்டு கட்டி வந்தேன் என்று முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளதே பொய் என்றால் சரியல்ல. 40 மாத சீட்டு என்பது மூன்று ஆண்டுகள் நான்கு மாதங்கள் தான் ஆகும் என்றாலும் அப்படி கட்டி வந்திருந்தாலும் 2020 முன்பே முடிந்திருக்கும் என்றாலும் நான் புகார்தாரரிடம் 2023 ல் வாங்கிய இந்த காசோலை சம்மந்தமான கடனை ஏமாற்றுவதற்காகவே பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன்

என்று சொன்னால் சரியல்ல. திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தர்மலிங்கம் என்பவர் விற்பனை ஒப்பந்தத்தின் பேரில் தாக்கல் செய்திருக்கும் வழக்கின் எண் தெரியுமா என்றால் OS 121/2024. அந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கும் எதிர் உரை இந்த இரண்டு வழக்குகளில் தாக்கல் செய்திருக்கும் பதில் அறிவிப்பு மற்றும் குறுக்கு விசாரணையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் நான் கூறியதின் அடிப்படையில் தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விற்பனை கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான், அதில் உள்ள விவரங்களை நான் படித்துப்பார்க்காமல் கையொப்பம் செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். OS 121/2024 என்ற வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையில் பிரதிவாதி கூறுவது யாதெனில் வாதியின் பேருக்கு பிரிதிவாதி விக்கிரிய அக்ரிமண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுக்கவில்லை என்பதே உண்மையாகும் என்று கூறியுள்ளது தண்டனைக்குரிய குற்றம் என்றால் அது வழக்கறிஞர்க்கு தான் தெரியும். ஒவ்வொரு வழக்கிலும் நான் ஒவ்வொரு நேரத்திலும் நான் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்பதால் எனது சாட்சியம் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் நான் பொய்சாட்சியம் அளிக்கவில்லை. அவரது வங்கி கணக்கை பார்த்தால் நான் பணம் அனுப்பிய விவரம் தெரியும் என்று கூறியுள்ள நிலையில் எனது வங்கி கணக்கில் இருந்து அனுப்பி இருந்தால் தான் அது தெரியும் என்றால் தெரியும். என் வங்கியில் இருந்து அந்த விவரங்களை வாங்கி இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கலாம் என்று சொன்னால் எனது வங்கி கணக்கு மூடப்பட்டு உள்ளது. வங்கி கணக்கு மூடப்பட்டு இருந்தாலும் வேண்டுதலின் மூலம் உரிய தொகை செலுத்தினால் வங்கியில் அந்த விவரங்களை தருவார்கள் என்றால் அது நிறைய வருடங்கள் ஆனதால் எடுக்கமுடியாது என கூறினார்கள். புகார்தாரர் அவரது ஓய்வூதியத்தின் மூலம் தான் ஜீவனம் நடத்தி வருகிறார் என்று சொல்லியுள்ள நிலையில் எப்போது இருந்து அவர் ஓய்வூதியம் வாங்கிவருகிறார் என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. அவர் 2023 ல் தான் பணி ஓய்வு பெற்றார் என்றாலும் அதன் மூலம் அவருக்கு ரூ.1 கோடி வந்தது என்றாலும் அதன் மூலம் தான் அவர் எனக்கு கடன் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. எனக்கும் இந்த நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்துள்ள வேறு வழக்கில் உள்ள குற்றம்சாட்டப்பட்டவர்களும் அந்த

நேரத்தில் அப்படி கடன் பெற்றவர்கள் தான் என்றால் சரியல்ல. அவர் தாக்கல் செய்துள்ள பிற வழக்குகளில் கோவிந்தராஜ் என்பவர் STC 337/2024 என்ற வழக்கில் ஒரு பாதி தொகையை செலுத்திவிட்டு மீதி தொகையை செலுத்த கால அவகாசம் கேட்டுள்ளார் என்பது தெரியுமா என்றால் அதுக்குறித்து வழக்கறிஞருக்கு தான் தெரியும். அவர் சீட்டுக்காக யாரிடமும் நிரப்பபட்ட காசோலையையும் கடனுறுதி சீட்டுகளையும் முத்திரைதாள்களையும் பெறும் பழக்கம் இல்லாதவர் என்றாலும் அவர் பெற்றதாக நான் முன்னுக்கு பின் முரணாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய முதன்மை சாட்சியத்தில் புகார்தாரர் எனக்கு ஒரு இடத்தில் ரூ. 19,50,000 கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றாலும் மற்றொரு இடத்தில் 27,00,000 கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றாலும் இப்படி முன்னுக்கு பின் முரணாக மனம் போன போக்கில் நான் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் எனது சாட்சியம் நிலைக்கத்தக்க அல்ல என்றால் நான் பொய்சாட்சியம் அளிக்கவில்லை, தர்மலிங்கம் தாக்கல் செய்த வழக்கில் ரூ.7,50,000 மும், பூபதி தாக்கல் செய்துள்ள வழக்கில் ரூ.19,00,000 மும் இரண்டையும் சேர்த்து தான் ரூ. 27,00,000 என கூறியுள்ளேன். தர்மலிங்கம் என்பவர் புகார்தாரருக்கு பினாமி இல்லை என அனுமானித்து தான் STC 546 /2023 ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றாலும் எத்தனை முறை சொன்னாலும் பொய் உண்மையாகி விடாது என்றாலும் அதைப்பற்றி எனக்கு தெரியாது " என சாட்சியமளித்துள்ளார்.

10. இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

11. குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர்

செலுத்தவில்லை. எனவே குற்றமுறையீட்டாளர் உரிய காலத்திற்குள் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

12. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், மேலும், காசோலையை குற்றமுறையிடுபவருக்கு குற்றம்சாட்டப்பட்டவர் கையெழுத்திட்டு கொடுக்கவில்லை என்றும், கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

14. இவ்வழக்கின் குற்றமுறையிடுபவரான பூபதி என்பவரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் குடும்ப தேவைக்காக கடந்த 28.06.2023ம் தேதி ரூ. 4,00,000/- ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதை 24% வட்டியுடன் 3 மாதத்தில் திரும்ப செலுத்துவதாக கூறியதாகவும். 10.12.2023ம் தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா, நாட்றம்பள்ளி கிளை, காசோலை எண் 012668 என்ற காசோலையை ரூ.4,45,000/- த்திற்கு கொடுத்ததாகவும், அதை 06.02.2024ம் தேதி மேற்படி காசோலையை கரூர்

வைசியா வங்கி, வாணியம்பாடி கிளையில் வசூலுக்கு செலுத்தியதாகவும், போதிய பணம் இல்லை(Funds insufficient) என்று காசோலையானது 07.02.2024ம் தேதி மெமோவுடன் திருப்பப்பட்டது என்றும், மேற்படி விவரத்தை 04.03.2024ம் தேதி அன்று வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றினை அனுப்பியதாகவும், அதை 06.03.2024ம் தேதி பெற்றுக்கொண்டு 16.03.2024ம் தேதி பொய்யான சங்கதிகளுடன் பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும், இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் காசோலை தொகையை கொடுக்கவில்லை என்பதும், மேலும், 10.12.2023ம் தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா, நாட்றம்பள்ளி கிளையின் 012668 என்ற எண்ணுள்ள ரூ.4,45,000/- க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்பதும், 07.02.2024ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்பதும், 04.03.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பு.த.சா.ஆ.3 என்பதும், 06.03.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அவிறிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.4 என்பதும், 16.03.2024ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு பு.த.சா.ஆ.5 என்பதும், அறிவிப்பு பெற்றுக் கொண்ட பிறகும் இன்றைய தேதி வரையிலும் காசோலைக்குண்டான தொகையை குற்றமுறையீட்டாளருக்கு அளிக்கவில்லை என்பதும், எனவே குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14(i). மேலும், புகார்தாரர் அவரது குறுக்கு விசாரணையில் " எதிரி கேட்டுக்கொண்டதற்கினங்க 2 சதவீத வட்டியுடன் தவருவதாக அவர் ஒப்புக்கொண்டதன்பேரில் எனக்கு வருமானம் தேவைப்பட்டதால் அவருக்கு 2 தவணையாக ரூ.4,00,000/- ரூ.4,50,000/- கொடுத்து தனித்தனியாக காசோலை பெற்றுக்கொண்டேன் என சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக இவ்வழக்கின் பு.த.சா.ஆ.1ஐ தாக்கல் செய்துள்ளார் என்றும், பணம்

கொடுத்த 1 மாதம் கழித்து தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்ப வழக்கறிஞரை அனுகினேன் என்றும், 06.02.2024 அன்று காசோலையை பணம் ஆக்க வங்கியில் செலுத்தினேன் என்றும், காசோலை திருப்பபட்டதை நான் எப்பொழுது தெரிந்து கொண்டேன் என்றால் 07.02.2024. போதிய பணம் இல்லை என்ற விவரத்தை நான் எதிரியிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை என்றும், அந்த விவரத்தை நான் நேரடியாக எதிரியிடம் கூறினேனா என்றால் இல்லை, வழக்கறிஞர் அறிவிப்பின் மூலம் தெரிவித்தேன் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை நிரூபணம் செய்வதற்காக 07.02.2024ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 மற்றும் 04.03.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பு.த.சா.ஆ.3ஐ தாக்கல் செய்துள்ளார். எதிரி தரப்பில் அதனை பெற்றுக்கொண்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் பு.த.சா.ஆ.4ஐயும் தாக்கல் செய்துள்ளார்.

15. மேலும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது புகார்தாரர் **"சீட்டு கட்டுபவர்களிடம் எவ்வளவு தள்ளு போனது என்றும், சீட்டு தொகை எவ்வளவு கட்ட வேண்டும் என்றும், என்னிடம் எவ்வளவு இருப்பு தொகை உள்ளது என்றும் ஒரு கார்டில் எழுதி கொடுப்பேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அவ்வாறு எதிரிக்கு நான் எழுதி கொடுத்த கார்டுகளின் நகல் தான் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்ததாலும். எதிரி என்னிடம் கட்டி வந்த 2லட்சம், 5லட்சம் சீட்டுகளுக்கு நான் எழுதி கொடுத்த கார்டுகளின் நகல் தான் என்று ஒப்புக்கொண்டதால் "**அந்த ஆவணத்தை எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து புகார்தாரரே எதிரி புகார்தாரரிடம் சீட்டுதான் கட்டி வந்தார் என்றும் ஒப்புக்கொண்டார் என்றும் அதனால் இந்த காசோலையானது சீட்டு கட்டியதற்காக கொடுக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள வேண்டும் என வாதம் புரிந்த நிலையில் நீதிமன்றம் அதை பரிசீலணை செய்து பார்க்கும்போது அந்த ஆவணமானது புகார்தாரருக்கும் இடடையே இருந்த சீட்டு பரிவர்த்தணைகளை மட்டுமே வெளிப்படுத்துகிறதே தவிர எதிரி கடனுக்காக காசோலை கொடுக்க வில்லை என்பதையோ அல்லது சீட்டு தொகையை

முழுவதுமாக செலுத்திவிட்டார் என்பதை வெளிப்படுத்தும் விதமாக அமைவில்லை என நீதிமன்றம் கருதுகிறது. எனவே புகார்தாரர் சீட்டு கட்டிவந்த விவரத்தை ஒப்புக்கொண்டுள்ளதால் மட்டுமே அவர் தரப்பு வலுவிழந்து விட்டதாக நீதிமன்றம் கருதமுடியாது. எனவே புகார்தாரர் **மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளார் என நீதிமன்றம் கருதுகிறது.**

15(i). **சட்டப்பிரிவு 139ன் கீழ் புகார்தாரர் ஒரு காசோலையை கடனை தீர்ப்பதற்காகவே பெற்றார் என்று நீதிமன்றம் கருதவேண்டும். இதை பொய் என நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden Of Proof) குற்றம் சாட்டப்பட்டவரையே சாரும்.**

15(ii). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக சாட்சி எ.த.சா.1 மற்றும் எ.த.சா.2 விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேலும், எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி புகார்தாரரின் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி மறுத்துள்ளார்களா?

17. "**இவ்வழக்கில் தர்மலிங்கம் எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலணை செய்து பார்க்கும்போது " புகார்தாரர் எனக்கு மாமா உறவுமுறையாவார் என்றும், எதிரி ராஜ்குமார் எனக்கு நண்பர் ஆவார். 2015–ஆம் ஆண்டு ராஜ்குமார் கேட்டுக்கொண்டதன் பேரில், அவரை புகார்தாரரிடம் சீட்டு கட்டுவதற்காக நான் அறிமுகப்படுத்தினேன். அதன் பிறகு நடந்த சீட்டு பரிவர்த்தனைகள் குறித்து எனக்கு முழு விவரமும் தெரியாது. ராஜ்குமார் சீட்டு தொகையை செலுத்தி, அதற்குரிய தொகையையும் பெற்றுக்கொண்டார் என்பது மட்டும் எனக்குத் தெரியும்"** என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் நீதிமன்றம் அதை பரிசீலணை செய்து பார்க்கும்போது 2015ம் ஆண்டிற்கு பிறகு புகார்தாரருக்கும்

எதிரிக்கும் இடையே நடந்த சீட்டு பண பரிவர்த்தனை குறித்து தெரியாது என்று கூறியுள்ளாரே தவிர இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை குறித்து எ.த.சா.1 கூறவில்லை என்றும், " **ராஜ்குமார் சீட்டு தொகையை செலுத்தி, அதற்குரிய தொகையையும் பெற்றுக்கொண்டார் என்பது மட்டும் எனக்குத் தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதற்கான ஆதாரங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும்** புகார்தாரர் சீட்டு நடத்த உரிமம் பெற்றிருந்தாரா, காசோலை எதற்காக பெறப்பட்டது, அந்த காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா, அல்லது எதிரி தனியாக கடன் வாங்கியிருந்தாரா என்பது குறித்து எனக்கு எந்தத் தகவலும் தெரியாது " என சாட்சியம் அளித்துள்ள நிலையில், அவரது நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, எ.த.சா.1 காசோலை கடனுக்காக வழங்கப்படவில்லை என்றோ, புகார்தாரரின் குற்றச்சாட்டு பொய்யானது என்றோ உறுதியாக கூறவில்லை என நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே அவரது சாட்சியம் எதிரி தரப்பிற்கு சாதகமாக அமையவில்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. இவ்வழக்கில் எதிரி ராஜ்குமார் எ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது " **புகார்தராரரிடம் கடந்த 2016 லிருந்து 2023 வரை சீட்டுக்கட்டி வந்தேன் என்றும், புகார்தாரர் தர்மலிங்கம் என்பவர் மூலம் தான் எனக்கு அறிமுகம் ஆனார் என்றும், நான் 2016 ல் ரூ. 5 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் சீட்டை போட்டேன் என்றும், அந்த சீட்டிற்கு மாதம் மாதம் ரூ.12,500 மற்றும் ரூ.5,000 ஒரு சீட்டிற்கும் மாதம் மாதம் செலுத்திவந்தேன் என்றும், நான் 2019 ல் சீட்டு எடுத்தேன் என்றும், அதற்கு புகார்தாரர் மூன்று வெற்று காசோலைகளும் என்னுடைய நிலத்தின் அசல் பத்திரித்தையும் பிணையமாக பெற்றுக்கொண்டார் என்றும், அதன்பிறகு 2020 ம் காலக்கட்டத்தில் கொரானா ஏற்பட்டதால் மீதுமுள்ள சீட்டுகளை என்னால் கட்டமுடியாது. அதற்கு தர்மலிங்கம் மற்றும் புகார்தாரும் என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவைத்து 19.04.2021 ம் தேதி அடைமானம் போட்டார்கள் என்றும், என்னை கையெழுத்து மட்டும் செய்யசொன்னார்கள் என்றும்,**

எதற்காக என்று தெரியவில்லை என்றும், மீதமுள்ள ஐந்து சீட்டுகளில் இரண்டு சீட்டுகளை கட்டிவிட்டேன் என்றும், மூன்று சீட்டுகள் மீதம் இருந்தது என சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஒரு காசோலை பிணையமாக (Security Cheque) கொடுக்கப்பட்டிருந்தாலும், சீட்டு பணம் கட்டத் தவறியதால் ஏற்பட்ட நிலுவைத் தொகை (Arrears/Debt) இருக்கும் பட்சத்தில், அந்தப் பணத்தை வசூலிக்க இந்த காசோலையைப் பயன்படுத்த முழு சட்ட உரிமை உண்டு. வெறும் "Security Cheque" என்ற வார்த்தையை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி தப்பிக்க முடியாது.

19. **Sampelly Satyanarayana Rao v. ISRO Marketing Ltd (2016) மற்றும் Sripati Singh v. State of Jharkhand (2021) ஆகிய வழக்குகளில்,** பிணையமாக வழங்கப்பட்ட காசோலையும், கடன் நிலுவையில் இருக்கும் பட்சத்தில், பிரிவு 138-ன் கீழ் சட்டபூர்வமான பொறுப்பை உருவாக்கும் என்று கூறப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் எதிரி கடனுக்காக காசோலை வழங்கப்படவில்லை என்றும், சீட்டு எடுத்த பணத்திற்காக தான் வழங்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ள நிலையில் அந்த சீட்டு பணத்தை முழுவதுமாக புகார்தாரருக்கு செலுத்திவிட்டார் என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் எதிரி தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் வாய்மொழி சாட்சியங்களை மட்டும் வைத்துக்கொண்டு புகார்தாரரின் வழக்கு வழுவற்றது என்று நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது. மேலும், எதிரி, இந்த காசோலை கடனுக்காக வழங்கப்படவில்லை என்பதை நிரூபிக்க எந்தவொரு வாய்மொழி அல்லது ஆவணச் சான்றுகளையும் (Oral or Documentary Evidence) சமர்ப்பிக்கவில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

20. இந்த வழக்கில் புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணையின்போது எ.த.சா.2 நீதிமன்றத்தில் **இந்த இரண்டு வழக்குகளிலும் மூலமாக இருக்ககூடிய இரண்டு காசோலைகளையும் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த காசோலைகள் எந்த வங்கியினுடையது என்றால் ஒன்று யுனியன் வங்கி, நாட்றம்பள்ளி கிளை மற்றொன்று HDFC வங்கி, திருப்பத்தூர் கிளை. இரண்டு காசோலை வழக்குகளிலும்**

காசோலைகளை நான் கொடுக்கவில்லை என்றும் கையொப்பம் என்னுடையது இல்லை என்றும் வழக்காடி உள்ளேன் என்றால் கையொப்பம் போட்டதாக நினைவில்லை, சீட்டுக்காக காசோலைகளை கொடுத்தேன், அதைக்குறித்து பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளேன். பதில் அறிவிப்பில் அதுபோன்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல, கூறியுள்ளேன். இந்த வழக்கு சம்மந்தமான காசோலை நான் கொடுத்தது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான், சீட்டுக்காக கொடுத்ததாக கூறியுள்ளேன். காசோலையை கொடுத்ததாக ஒப்புக்கொண்டாலே அது கையொப்பம் இட்டு கொடுத்ததாக எடுத்துக்கொள்ளலாம் என்றால் சரியல்ல, நான் பிணையமாக கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அதை பரிசீலணை செய்து பார்க்கும்போது நிரப்பப்படாத வெற்று காசோலையை தான் நான் புகார்தாரருக்கு கொடுத்தேன் என்று சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபிக்கும்பொருட்டு எந்தவிதமான சாட்சிகளோ சான்றாவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

21. மேலும், எதிரி காசோலையில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்பதை நிரூபிக்க இந்திய சாட்சிய சட்டபிரிவு 45-ன் கீழ் கையெழுத்து நிபுணரின் ஆய்விற்கு அனுப்ப எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை என நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எதிரி புகார்தாரரின் குறுக்கு விசாரணையின்போது " **இரண்டு காசோலைகளையும் நான் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த காசோலைகள் எந்த வங்கியினுடையது என்றால் ஒன்று யுனியன் வங்கி, நாட்றம்பள்ளி கிளை மற்றொன்று HDFC வங்கி, திருப்பத்தூர் கிளை. இரண்டு காசோலை வழக்குகளிலும் காசோலைகளை நான் கொடுக்கவில்லை என்றும் கையொப்பம் என்னுடையது இல்லை என்றும் வழக்காடி உள்ளேன் என்றால் கையொப்பம் போட்டதாக நினைவில்லை, சீட்டுக்காக காசோலைகளை கொடுத்தேன், "** என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் இந்த வழக்கின் காசோலையான பு.த.சா.ஆ.1ஐ பரிசீலணை செய்து பார்க்கும்போது இந்த வழக்கின் காசோலையானது எதிரி குறுக்கு

விசாரணையில் கூறியதுபோ யூனியன் வங்கியின் காசோலை என்பதும், அது எதிரி உடைய காசோலை என்பதும் நீதிமன்றத்திற்கு புலனாகிறது.

22. **மேலும்,** எதிரி காசோலை என்னுடையது, அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று வாதம் புரியும் நிலையில் குறுக்கு விசாரணையில் காசோலை என்னுடையது தான் ஆனால் கையொப்பம் போட்டதாக நினைவில்லை என்று அவர் சாட்சியம் அளித்திருப்பது எதிரி தரப்பு வாதத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் உண்மையிலேயே காசோலையில் கையெழுத்து போட்டாரா அல்லது போடவில்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறாறோ என்ற சந்தேகம் நீதிமன்றத்திற்கு எழுகிறது.

23. மேலும், பிணையமாகதான் காசோலையை கொடுத்தேன் என்ற வாதம் மட்டும் மாற்றுமுறை ஆவணச்சட்டபிரிவு 138–ன் கீழ் இருந்து அவரை விடுவிக்காது. ஒரு காசோலை கடன் அல்லது வேறு ஒரு பரிவர்த்தணைக்காக பிணையமாக வழங்கப்பட்டிருந்தாலும் அந்த காசோலை வங்கியில் செலுத்தப்படும் தேதியில் எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இருந்தது என்பதை அவர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இவ்வழக்கில் எதிரி காசோலையை மறுக்காமல் கையெழுத்து அவருடையது அல்ல என்று வாதம் புரிந்த நிலையில் பு.த.சா.ஆ.2ஐ பரிசீலணை செய்து பார்க்கும்போது வழக்கு காசோலையானது போதிய பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டுள்தே தவிர கையெழுத்து மாறுபட்டுள்ளதாக திருப்பப்படவில்லை என்பதால் எதிரியின் இந்த வாதம் ஆனது எதிரி தரப்பிற்கு சாதகமாக அமையவில்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

24. மேலும், மாற்றுமுறை ஆவணச்சட்டபிரிவு 139–ன் கீழ் எழும் சட்ட அனுமானத்தை எதிரி வெறும் வெற்று வாதங்களால் (Mere Denial) மட்டும் முறியடிக்க முடியாது. சாத்தியக்கூறுகளின் முன்னிலை (Preponderance of Probabilities) அடிப்படையில் தகுந்த

சான்றுகள் மூலம் அதை அவர் பொய்யாக்க வேண்டும். இங்கு எதிரி அதைச் செய்யத் தவறிவிட்டார் என நீதிமன்றம் கருதுகிறது.

25. **M.S. Narayana Menon v. State of Kerala (2006) மற்றும் Kishan Rao v. Shankargouda (2018)** ஆகிய வழக்குகளின்படி, எதிரி தன் வாதத்தை நிரூபிக்க தகுந்த ஆதாரங்களை நீதிமன்றத்தின் முன் வைக்காத பட்சத்தில், புகார்தாரரின் வழக்கே தடையின்றி நிரூபிக்கப்பட்டதாகவே கருதப்படும். வெறுமனே குறுக்கு விசாரணையில் வாய்மொழியாக "சீட்டுக்காக கொடுத்தேன்" என்று கூறுவது, பிரிவு 139–ன் கீழ் உள்ள சட்ட அனுமானத்தை முறியடிக்க (Rebut) போதுமானது அல்ல.

26. இவ்வழக்கில் புகார்தாரர் தன் தரப்பு சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் வழக்கின் அடிப்படைத் தேவைகளை (Legal Notice, Cheque Return Memo, etc.) முறையாக நிரூபித்துள்ளார். ஆனால், எதிரி தனக்கு சாதகமான சட்ட அனுமானத்தை (Presumption) முறியடிப்பதற்கு (Rebut) எவ்வித சான்றுகளையும் சமர்ப்பிக்கத் தவறிவிட்டார். எதிரி காசோலையை "சீட்டு கட்டுவதற்காக கொடுத்தேன்" என்று கூறுவது ஒரு வெறும் சாக்குப்போக்கு வாதம் (Mere plausible explanation) மட்டுமே. தனிப்பட்ட முறையில் கடன் வாங்கவில்லை, சீட்டுக்காகத்தான் கொடுத்தேன் என்பதை நிரூபிக்கும் பொருட்டு எதிரி தரப்பில் குறியீடு செய்த **எ.த.சா.ஆ.1 நகலை** பரிசீலணை செய்து பார்க்கும்போது புகார்தாரரிடம் எதிரி சீட்டு கட்டி வந்துள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறதே தவிரே சீட்டு எடுத்த பணம் தொகை அனைத்தையும் செலுத்திவிட்டார் என்பதை நிரூபிக்கும் விதமாக அமையவில்லை என நீதிமன்றம் கருதுகிறது.

27. இவ்வழக்கில் புகார்தாரர் காசோலைகளை வைத்து பலரின் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்வதை வாடிக்கையாக வைத்துள்ளார் என்றும் புகார்தாரரரே பலரின் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என ஒப்புக்கொண்டுள்ளதால் எதிரி தரப்பில் எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை பரிசீலணை செய்து பார்க்கும்போது புகார்தாரர் பல காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என

நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. ஆனால் அந்த ஒரு காரணத்தை மட்டும் வைத்துக்கொண்டு இந்த வழக்கானது முற்றிலும் மோசடியான வழக்காக கருத முடியாது . மோசடியான வழக்கு என்பதை நிரூபிக்கும் பொறுப்பு(Burden of Proof) எதிரியை சாரும் நிலையில் எதிரி தரப்பில் இந்த வாதத்தை நிரூபிக்கும் பொருட்டு சாட்சிகள் அமையவில்லை என்றும் எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள **எ.த.சா.ஆ.1 முதல் எ.த.சா.ஆ.10** வரையிலான ஆவணங்களை மட்டும் வைத்துக்கொண்டு இந்த வழக்கை தீர்மானிக்க முடியாது என்றும் , ஒவ்வொரு காசோலை வழக்கும் தனிப்பட்ட சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் தான் தீர்மானிக்க பட வேண்டும் என்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய முடியாது என்றும் நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

28. மேலும் எ.த.சா.1 மற்றும் எ.த.சா.2ன் சாட்சியம் முன்னுக்குப்பின் முரணாக இருப்பதால் அவர்களது இருவரின் சாட்சியமும் எதிரி தரப்பிற்கு சாதகமாக அமையவில்லை. எனவே புகார்தாரரின் குற்றசாட்டை மறுக்கும் விதமாக எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அமையவில்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

29. எனவே புகார்தாரரின் குற்றசாட்டை மறுக்கும் விதமாக எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் நிரூபிக்க வில்லை என நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

30 " Omnia Praesumuntur rite et solenniter esse acta " (அனைத்து அரசு அல்லது அதிகாரப்பூர்வ செயல்களும் முறையாகவும், சரியாகவும் செய்யப்பட்டதாகவே கருதப்படும்.)

30(i). மேலும், வங்கியின் ரிட்டர் மெமோ என்பது ஒரு முறையான ஆவணம் என்பதால் குற்றமுறையிடுபவர் தரப்பில் பு.த.சா.ஆ.2 முறையான ஆவணமாக நீதிமன்றம் கருதுகிறது. பிரிவு 118 மற்றும் 139 மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர் தனது தற்காப்பை நிரூபிக்க தவறிவிட்டார் என்பதால்

குற்றம்சாட்டப்பட்டவரின் தரப்பு வாதம் வலுவிழந்து விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

31. மேலும், குற்றம் சாட்டப்பட்டவரிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும், நான் காஸ் வாங்கவில்லை, காசோலை கொடுக்கவில்லை, பொய் வழக்கு என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை நிரூபிக்கும் வண்ணம் எவ்வித சான்றாவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. **மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம் திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.** மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்படவரின் கடமை என கூறுகிறது.

30(i). ஆனால், எதிரி தனது முதல் கேள்வியில் குற்றம் குறித்து வினாவிய போது குற்றவாளி இல்லை எனவும், போர்ஜரி கேஸ் என்று கூறியுள்ளாரே தவிர பணம் எதுவும் வாங்கவில்லை என்று மறுத்து கூறவில்லை என்பதாலும், இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவரால் தான் காசோலையானது புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டது என புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கின் காசோலையானது எதிரி வாங்கிய கடனுக்காக கொடுக்கப்பட்டதாகவே இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. அந்த அனுமானத்தை குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மறுத்து சாட்சியை விசாரணை செய்யப்பட்ட போதிலும் சாட்சி அதனை உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இந்நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டவர் தனது கடமையை தவறவிட்டதாகவே நீதிமன்றம் கருதுகிறது.

30(ii). குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.5 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை, குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

30(iii). மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கபட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

31. இவ்வழக்கில் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றஞ்சாட்டபட்டவர் குற்றவாளி என தீர்மானிக்கபட்டதினால் குற்றமுறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதி உடையவர் ஆவார். வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், குற்றமுறையீட்டாளருக்கு காசோலை தொகையான ரூ.4,45,000 + செலவுத் தொகை ரூ.10,000/- மொத்தம் ரூ.4,55,000/-த்தை இழப்பீடாக குற்றமுறையீட்டாளருக்கு வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

32. முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்பட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம்

மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.4,45,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.4,55,000/- குற்றமுறையீட்டாளருக்கு நஷ்ட ஈடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் ஜூலை மாதம் 16 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

இணைப்புகள்

குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்

1.	பு.த.சா.1	திரு.பூபதி

குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்

1.	பு.த.சா.ஆ.1	10.12.2023ம் தேதியிட்ட யூனியன் பேங்க் ஆப் இந்தியா, நாட்றம்பள்ளி கிளையின் 012668 என்ற எண்ணுள்ள ரூ.4,45,000/- க்கான காசோலை அசல்.
2.	பு.த.சா.ஆ.2	07.02.2024ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ.
3.	பு.த.சா.ஆ.3	04.03.2024ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக

		நகல்.
4.	பு.த.சா.ஆ.4	06.03.2024ம் தேதியிட்ட எதிரி புகார்தாரரின் வழக்கறிஞர் அவிறிப்பை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புதல் அட்டை.
5.	பு.த.சா.ஆ.5	16.03.2024ம் தேதியிட்ட எதிரி அவரது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதிலறிவிப்பு.

<u>**குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி**</u>

1.	எ.த.சா.1	திரு.தர்மலிங்கம்
2.	எ.த.சா.2	திரு.ராஜ்குமார்

<u>**குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சான்றாவணங்கள்**</u>

1.	எ.த.சா.ஆ.1	எதிரி புகார்தாரரிடம் கட்டி வந்த 2 லட்சம், 5 லட்சம் சீட்டுகளுக்கு எழுதி கொடுத்த கார்டுகளின் நகல்.
2.	எ.த.சா.ஆ.2	புரோநோட் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு.
3.	எ.த.சா.ஆ.3	பதில் அறிவிப்பு.
4.	எ.த.சா.ஆ.4	அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புகை அட்டை.
5.	எ.த.சா.ஆ.5	ரூ.5,00,000/–த்திற்கான புரோநோட் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு.
6.	எ.த.சா.ஆ.6	ரூ.5,00,000/–த்திற்கான பதில் அறிவிப்பு.
7.	எ.த.சா.ஆ.7	அறிவிப்பை புகார்தாரரின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்காக அஞ்சலக ஒப்புகை அட்டை.
8.	எ.த.சா.ஆ.8	STC 335/2024 என்ற வழக்கின் ஆவணம்.
9.	எ.த.சா.ஆ.9	STC 337/2024 என்ற வழக்கின் ஆவணம்.
10.	எ.த.சா.ஆ.10	STC 402/2024 என்ற வழக்கின் ஆவணம்.

<u>**குறிப்பு**</u>

1. வழக்கின் முடிவு குற்ற முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. கு.வி.மு.ச பிரிவு 204ன் கீழ் எதிரிக்கு இலவசமாக தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.

3. எதிரி கு.வி.மு.ச. பிரிவு 389 (3) மனுவின் பேரில் தண்டனை காலம் 1 மாத காலத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

ஒம்/–கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.